பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

விற்பனையாகிறது
இந்துநாகரிகத்திற் கலை
கலாநிதி காரை.
செ. சுந்தரம்பிள்ளை
எழுதியது
(சி 9055)

விற்பனையாகிறது
இந்துநாகரிகத்திற் கலை
கலாநிதி காரை.
செ. சுந்தரம்பிள்ளை
எழுதியது
க.பொ.த. உயர்தரம் தொடக்கம் பீ.ஏ. வகுப்பு வரை இந்துநாகரிகத்தையும் நுண்கலையையும் கற்கும் மாணவர்களுக்கு ஏற்ற அரியதொரு நூல்.
(சி-9055)

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆவணி 23 வியாழக்கிழமை (08 09 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 285

அரசு - புலிகள் பேச்சுக்கு முன்னோடியாக லயனல் பெர்னாண்டோ யாழ். வருவார்?

ஆயத்த வேலைகளை செய்யும் பொறுப்பு அவரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 8

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் பொருட்டு, அதற்கான ஆயத்த வேலைகளைச் செய்யும் பொறுப்பு – பின்னணியைத் தயாரிக்கும் பொறுப்பு – திரு. லயனல் பெர்னாண்டோவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக, கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

பேச்சுவார்த்தைகளுக்குரிய ஆரம்ப வேலைகளை அரசாங்கத்தின் சார்பில் செய்யுமுகமாக அவர் விரைவில் யாழ்ப்பாணம் வருவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது தகவல்துறை அமைச்சின் செயலாளராகப் பதவி வகிக்கும் திரு. லயனல் பெர்னாண்டோ, அதற்கு முன்னர் விஜேதுங்கா ஐ.தே.க. அரசில் வடக்கு கிழக்கு மாகாண ஆளுநராகப் பணி புரிந்தார். 1970 களின் நடுப்பகுதியில் யாழ்ப்பாண அரசாங்க அதிபராக பணி புரிந்த அவர் இங்கு மக்கள் அன்பைப் பெற்றவராவார்.

நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கும், யுத்த நிறுத்தத்துக்கும் தயார் என்று விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கான பின்னணியைத் தயாரிக்கும் பொறுப்பை திரு. லயனல் பெர்னாண்டோவிடம் ஒப்படைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

திரு. லயனல் பெர்னாண்டோவின் நியமனம் மிகப் பொருத்தமானதென்று அரசியல் அவதானிகள் கருத்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

கிட்டு நினைவு பூங்கா சனி வரை மூடப்பட்டிருக்கும்

யாழ்ப்பாணம், செப். 8

[illegible] கிட்டு நினைவுச் சிறுவர் பூங்கா பசுமைபேணும் நோக்குடன் பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளப் படவுள்ளதால் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை வரை மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சமாதானத் தூது செல்ல மதத்தலைவர்கள் விருப்பம்

கொழும்பு, செப். 8

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே தூதுசெல்வதற்கு மதத் தலைவர்கள் பலர் முன்வந்துள்ளதாக கொழும்பில் நேற்று அறிவிக்கப்பட்டது.

மதத் தலைவர்கள் பலர் கூட்டாகச் சேர்ந்து யாழ்ப்பாணம் செல்ல விருப்பம் தெரிவித்துள்ளனர் என்றும்—

இது தொடர்பாக மதத் தலைவர்கள் இடையே பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ஐ)

யாழ். மாவட்டத்தில்

135 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம்

யாழ். மாவட்டத்தில் 135 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்களை கொள்கை, திட்டமிடல் அமைச்சு வழங்கியுள்ளது.

கொள்கை திட்டமிடல் அமைச்சினால், யாழ் செயலகத்தில் முன்னர் நடத்தப்பட்ட பட்டதாரிகளுக்கான தேர்முகப் பரீட்சையில் தோற்றியவர்களில் இருந்த 135 பேருக்கு நியமனங்களும் வழங்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே ஒருதொகுதி பட்டதாரிகள் பட்டதாரி பயிலுநர்களாக யாழ். மாவட்டத்தில் உள்ள திணைக்களங்களில் நியமனம் பெற்றிருப்பது தெரிந்ததே.

புதிதாக ஆசிரிய நியமனம் பெற்றவர்கள் தாம் கடமைப் பொறுப்பேற்க வேண்டிய இடங்களை கொழும்பு கல்விச் சேவை குழுவுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனவும்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் யாழ் திட்டமிடல் பணிமனையினால் அனுப்பப்பட்டுள்ளதாகவும்— யாழ். செயலக திட்டமிடல் பணிப்பாளர் திரு வி. செ. சுவாமிநாதன் உதயனுக்குத் தெரிவித்தார். (ஒ-3)

முச்சந்தி முனி



அப்ப...... டி. பியசச் செதியிலை வீட்டைப் போய் ஓய்வெடுக்கப் போறார் எண்டு சொல்லுங்கோ.........!

பிரபாவுக்கு பதில் அனுப்ப அரசாங்கம் நடவடிக்கை

சந்திரிகா தீவிர கவனம்

கொழும்பு, செப். 8

கடந்த திங்களன்று பிரதமர் திருமதி சந்திரிகா குமாரதுங்காவிடம் கையளிக்கப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் திரு. வே. பிரபாகரனின் கடிதத்துக்கு—

சமாதானமான — சாதகமான பதில் கடிதம் ஒன்றை துரிதமாக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கையில் பிரதமர் சந்திரிகா தீவிரமாக ஈடுபட்டிருப்பதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

போருக்கு முடிவு கட்டி இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதற்கு பேச்சு நடத்த வருமாறு அரசு விடுத்த பகிரங்க அழைப்பை ஏற்ற புலிகள் இயக்கத்தினர் பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் ''பாக்ஸ்'' மூலமாக கொழும்புக்கு அனுப்பப்பட்டு கடந்த திங்களன்று பிரதமரிடம் கையளிக்கப்பட்ட இக் கடிதத்தில் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கும் போர் நிறுத்தத்துக்கும் புலிகள் தயார் என்றும் —

பேச்சுவார்த்தைக்கு மத்தியஸ்தர் எவரும் தேவையில்லை என்றும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளியன்று யாழ்ப்பாணத்தில் 10 பொலிஸாரை விடுதலை செய்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரிடம் ஒப்படைத்த வைபவத்தில் நடந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

வீரச்சாவு

யாழ்ப்பாணம், செப். 8

கடந்த 4 ஆம் திகதி மட்டக்களப்பில் சந்தனமடு ஆற்றுப் பகுதியில் இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த மோதலில் விடுதலைப் புலிகள் போராளியான லெப்டினன்ட் ஆபிலியன் அல்லது லக்ஷ்மன் (ஆறுமுகம் சாந்தலிங்கம் – மட்டக்களப்பு). இயக்க ஆதரவாளரான சின்னவன் (மட்டக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

இரு சிப்பாய்கள் கடலில் மூழ்கி மரணம்

கொழும்பு, செப். 8

இரண்டு இராணுவ சிப்பாய்கள் வாதுவை, தம்பிற்றிய கடலில் மூழ்கி மரணமானார்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

நந்தசிறி மற்றும் பெர்னாண்டோ ஆகிய சிப்பாய்கள் இன்னும் பத்து சக சிப்பாய்களுடன் கடலில் நீராடுகையிலேயே இவ்விபத்து ஏற்பட்டது (ஒ-எ)

20 முன்னாள் அமைச்சர்கள் உட்பட

200 முக்கியஸ்தர்களுக்கு எதிராக லஞ்ச குற்றச்சாட்டு

நீதி அமைச்சர் பீரிஸ் தகவல்

கொழும்பு, செப். 8

முன்னாள் ஐ.தே.க. அரசின் 20 அமைச்சர்கள் 200 முக்கியஸ்தர்களுக்கு எதிராக லஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக நீதி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

முன்னாள் எம்.பிக்கள், அரச உயர் அதிகாரிகள், கூட்டுத்தாபனத் தலைவர்கள், இயக்குநர்கள் ஆகியோரும் இவர்களில் அடங்குகின்றனர் என்று சிலுமின பத்திரிகை தெரிவித்துள்ளது.

லஞ்சம், ஊழல் பற்றி தினமும் 20 முறைப்பாடுகள் கிடைத்து வருவதாகவும் — இவைகளை விசாரிக்கும்போது என்ன என்னவெல்லாம் வெளிவருமோ என்பது தெரியாதெனவும் அமைச்சர் தெரிவித்தார். (ஒ-எ-6)

ஜனாதிபதி வேட்பாளராக சந்திரிகா போட்டியிடுவார்!

சுதந்திரக் கட்சி ஏகமனதாகத் தீர்மானம்

கொழும்பு, செப். 8

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு பிரதமர் சந்திரிகாவையே நிறுத்துவது என்று சுதந்திரக் கட்சி நேற்று ஏகமனதாகத் தீர்மானித்தது.

இம்முடிவு நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவால் அங்கீகரிக்கப்படவிருக்கிறது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளும் சந்திரிகாவையே ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கும் முடிவை ஆதரிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடும் பட்சத்தில், தமிழ்க் கட்சிகள் மற்றும் இ.தொ.கா. போன்றவை அவருக்கு முழு ஆதரவு வழங்கும் என எதிர்பார்க்கப்படுவதாக அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஐ.தே.க. சார்பில் அநேகமாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. காமினி திஸநாயக்கா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என்றும் நம்பப்படுகிறது.

காமினி ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவார் என்பதை ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா அண்மையில் நடந்த கட்சியின் குழுக்கூட்டத்தில் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-எ-ஈ-6)

கஷ்டங்களை கேட்டறிவதுடன் நடவடிக்கையும் எடுக்கிறார்

சந்திரிகா குறித்து யாழ். அரச அதிபர்

யாழ்ப்பாண மக்களின் கஷ்டங்களை நான் எடுத்துரைத்தபோது, பிரதமர் சந்திரிகா மிக அவதானத்துடன் கேட்டதோடன்றி, அவற்றைத் தீர்ப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்கவும் உறுதியளித்தார்.

அவருக்கு ஒத்துழைப்புக் கொடுப்போமானால் யாழ்ப்பாணத்தில் இப்போதுள்ள நிலைமையில் விரைவில் மாற்றங்கள் வரும்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் இலங்கை வானொலிக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

அரச அதிபர் தமது பேட்டியில் தெரிவித்ததாவது:

பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவை சந்தித்தேன். அச்சந்திப்பில் பாதுகாப்பு பிரதி அமைச்சர் அநுருத்த ரத்வத்தையும் உடனிருந்தார்.

யாழ் மாவட்ட நிலை குறித்த அறிக்கை ஒன்றை பிரதமரிடம் கையளித்தேன். அந்த அறிக்கையைப் பார்த்து அவர் அதிசயப்பட்டார்.

[3 ஆம் பக்கம் பார்க்க]

திருமலையில் தமிழர் மீது ராணுவம் கொடூர தாக்குதல்

யாழ்ப்பாணம், செப். 8

திருகோணமலையில் தமிழர்கள் மீது ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மிகக் கொடூரமான முறையில் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

புதிய ஸ்ரீலங்கா அரசின் ஆட்சியில் இயல்பு வாழ்க்கை மீண்டும் திரும்பும் என எதிர்பார்த்த திருகோணமலை மக்களுக்கு இராணுவத்தினரின் இந்தச் செயல் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த மூன்றாம் திகதி திருகோணமலையின் முகத்துவாரத்தில் 35க்கும் மேற்பட்ட தமிழர்கள் மிகவும் கொடூரமான முறையில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் அடித்துக் கொடுமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

இதேதினம் சீனன்வெளியில் உள்ள கரையோரவாடி ஒன்றையும், உப்பூறல் பகுதியில் தமிழர் ஒருவரின் வீட்டையும் இராணுவத்தினர் தீயிட்டு கொளுத்தி நாசப்படுத்தியுள்ளனர்.

பட்டிவடி, ஈச்சிலம்பற்றை ஆகிய பகுதி முகாம்களில் இருந்து வந்த இராணுவத்தினரே மேற்படி வன்முறைகளைப் புரிந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-3)

யாழ். பல்கலைக்கழகத்தின் 14 ஆவது பட்டமளிப்புவிழா

நாளை மறுதினம் கைலாசபதி அரங்கில்

யாழ்ப்பாணம், செப்.8

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 14 ஆவது பட்டமளிப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை கைலாசபதி கலையரங்கில் வெகு விமரிசையாக நடைபெறவுள்ளது.

வழமை போன்று மூன்று அமர்வுகளில் விழா இடம்பெறும். முதல் அமர்வு காலை 9 மணிக்கும் இரண்டாவது அமர்வு முற்பகல் 11 மணிக்கும், மூன்றாவது அமர்வு பிற்பகல் 2 மணிக்கும் ஆரம்பமாகும்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் காலஞ்

(4 ஆம் பக்கம் பார்க்க)

மைத்திரிபால ஆளுநராக பதவிப்பிரமாணம்

கொழும்பு, செப். 8

சுதந்திரக்கட்சியின் ஸ்தாபக தலைவர்களில் ஒருவரான மைத்திரிபால சேனநாயக்கா வடமத்திய மாகாண ஆளுநராக நேற்று ஜனாதிபதி விஜேதுங்கா முன்னிலையில் பதவிப்பிரமாணஞ் செய்து கொண்டார். (ஒ-எ-6)

இனப்பிரச்சினை உள்விவகாரம்; வெளியார்தலையீடுதேவையில்லை

நாடாளுமன்றில் அமைச்சர் அஷ்ரப்

கொழும்பு, செப். 8

இனப்பிரச்சினை எமது நாட்டின் உள்விவகாரம் அதனைத் தீர்ப்பதற்கு வெளியார் தலையீடு தேவையில்லை

துறைமுக கப்பல் துறை, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் முன்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை மீது நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசியபோதே அவர் இப்படிக் கூறினார்.

இனப்பிரச்சினை தொடர்பான காட்சியில் விடுதலைப் புலிகள் பிரதான நடிகர்கள். முஸ்லிம் காங்கிரஸும் அதில் பிரதான பங்கு வகிக்கிறது. யதார்த்தபூர்வமாக இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பாக பெரும்பான்மைச் சமூகம் செயற்பட முன்வர வேண்டும்.

இனப்பிரச்சினை சர்வதேச மயப்பட்டுவிட்டதாக சில கட்சித் தலைவர்கள் கூறியுள்ளனர். இப்பிரச்சினைக்கு சர்வதேசப் பரிமாணம் இருக்கலாம். ஆனால் இது உள்விவகாரம் மட்டுமே ஆகும் -

இவ்வாறு அமைச்சர் அஷ்ரப் மேலும் தெரிவித்தார். (ஒ-எ)

சிப்பாய் பலி!

கொழும்பு, செப். 8

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு வவுனியாப்பகுதியில் உள்ள இராணுவ முகாம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் ஒன்றில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் என்று அறிவிக்கப்படுகிறது. (ஒ-எ-6)

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

வீட்டுத் தளபாடங்கள், சைக்கிள், தையல் மெஷின் T.V. டெக், ஓடு, சீற், தீராந்தி, லெவல் சீற், நாய்க்கூடு, கோழிக்கூடு, ஆர்மோனியம், ஓவன், அம்மி, கல் உரல், சராமிக் கிளாஸ் வகைகள் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருள்கள் விற்பனைக்கு உண்டு. இல. 275, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (32746)

புறொயிலர் குஞ்சுகள், புறொயிலர் கோழிகள் உடன் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். 702, கே. கே. எஸ். வீதி, சிவலிங்கப் புளியடி, யாழ்ப்பாணம். (32750)

8''x4'' கடை, சோக்கேஸ், சாப்பாட்டு மேசை, ஸ்ரில் அலுமாரி [லாச்சி மொடல்], கண்ணாடி மேசை, விற்பனைக்கு உண்டு. தொடர்பு: (குறிஞ்சி மெடிக்கலுக்கு அருகில்) பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி. (32764)

இரண்டு வயது நிரம்பிய பிறவுண் பொமரேனியன் நாய் விற்பனைக்கு உண்டு. R. P. சங்கர், இல 187, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (32756)

தேக்கம் பலகை 1½''x1'' பாலைத் தீராந்தி 4x3 பவர்ணை 2x2, கண்டா வளை மண் விற்பனைக்கு உண்டு. சிவலிங்கம் மோட்டோர்ஸ், 77, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம். (7848)

மணமகன் தேவை

இந்து கௌரவமான குடும்பத்திலுள்ள 18-12-58 பூராடம் 4ஆம் பாதம், 6இல் செவ்வாய் உள்ள B. A. டிப்ளோமா ஆசிரியைக்கு அரச உத்தியோகத்திலுள்ள மணமகன் தேவை. அபிராமி, துர்க்காதேவி தேவஸ்தான பின் வீதி, சாவகச்சேரி. (32732)

கௌரவமான குடும்பத்து அழகும் குணமும் உள்ள B A. பட்டதாரி 20-2-1966 சதயம் 2ஆம் பாதம், 5இல் செவ்வாயுள்ள மணமகளுக்கு கௌரவமான குடும்பத்தில் உள்ள அரச உத்தியோக மணமகன் தேவை. தொடர்பு கொள்க. அபிராமி, துர்க்கா தேவி தேவஸ்தான பின் வீதி, சாவகச்சேரி. (32730)

இந்து கௌரவமான குடும்பத்திலுள்ள 25-9-1960 விசாகம், 3ஆம் பாதம், 12இல் செவ்வாய் உள்ள B. Sc ஆசிரியைக்கு அரச உத்தியோகத்தில் உள்ள மணமகன் தேவை. தொடர்பு: அபிராமி திருமண சேவை நிலையம், துர்க்கா தேவி தேவஸ்தான பின் வீதி, சாவகச்சேரி (32731)

இந்து கௌரவமான குடும்பத்திலுள்ள 15-1-1962 பரணி 3ஆம் பாதம், 2இல் செவ்வாயுள்ள B Sc ஆசிரியைக்கு இந்து கௌரவமான குடும்பத்திலுள்ள அரச உத்தியோகமுள்ள மணமகன் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்க. தொடர்பு: அபிராமி திருமண சேவை நிலையம், துர்க்கா தேவி தேவஸ்தான பின் வீதி, சாவகச்சேரி. (32729)

தேவை

புதிய முறையில் வெட்டித் தைக்கக்கூடிய அனுபவம் மிக்க பெண்பிள்ளை ஒருவர் உடன் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இல. 275, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (32747)

இந்து மகளிர் பாடசாலைக்கு அண்மையாக சிறு குடும்பத்துக்கு ஏற்றவாறு வீடு தேவை. தொடர்பு: செ. துரைரத்தினம், 48, ஓடை லேன், வண்ணார்பண்ணை. (32766)

மெஷின் மைண்டர், கொம்பசிட்டர் தேவை. நேரில் வரலாம். இருபாலாரும் தேவை. 37, பிரதான வீதி, சுன்னாகம். (7628)

புறொயிலர் குஞ்சுகள்

Prima, Broiler பிறிமா, புறோயிலர் ஐந்து நாள் கோழிக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ''மகிவாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (32733)

தவறிவிட்டது

காங்கேசன்துறையிலிருந்து இடம்பெயர்ந்து ஆரியாலையில் வசிக்கும் கி. தவமணியின் பவுண் தங்கச் சங்கிலி நல்லூர்த் தேர்த்திருவிழா அன்று கோயிலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இரக்க சிந்தையுடன் இல. 39/10, புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர் மேற்கு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (32753)

பாரதி விழா

1994 - 09 - 11

ஞாயிறு

இளங்கலைஞர் மன்றம்

உள்ளூராட்சித் திணைக்களம்

அன்பளிப்பு:

எஸ் எம் பெர்னாண்டோ

(சி-8989)

''உன்னைத் திருத்திக்கொள் சமூகம் தானாகவே திருந்திவிடும்.''

— சுவாமி சிவானந்தர்

இன்று

சிவானந்த மஹரிஷி ஜயந்தி

சுவாமிகளின் அரிய வண்ணப் படம்

★ 'மில்க்வைற்' சோப் மேலுறை / சுவைத் தாள் வெற்றுப் பக்கற் 10 சேர்ப்பித்து அன்பளிப்பாகப் பெறுங்கள்.

— ''மில்க்வைற்''

[சி-9073]

விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்,

A/L 94 இல்

பரீட்சைக்குத் தோற்றிய மாணவருக்கான

DAY CLASS

ஆரம்பம்: 12-09-1994

திங்கள்

அனுபவமும் ஆற்றலுமிக்க ஆசிரியர் குழு

பொருளியல்	— திரு. க. கலாகரன்
கணக்கியல்	— திரு. எஸ் கே. பிரபாகரன்
வர்த்தகம்	— திரு. ரி. வரதன்
அளவையியல்	— திரு விக்கி
	— திரு பிரபா
இந்துநாகரிகம் இந்துசமயம்	— திரு. காரை. சுந்தரம்பிள்ளை
தமிழ்	— திரு. குழந்தை
புவியியல்	— திரு. குணராஜா
அரசியல்	— திரு. சீலன்
வரலாறு	— திரு ஸ்ரீதரன்
நாடகமும்-அரங்கியலும்	— திரு. சதீபா
கிறிஸ்தவம்	— திரு. தனேஸ்

குறிப்பு:

★ வாரத்தில் ஒவ்வொரு பாடமும் ஆறு மணித்தியாலங்களுக்கு குறையாதவாறு பயிற்சிப் பரீட்சைகளுடன் நடாத்தப்படும்.

★ முழு அலகுகளும் கடந்த கால வினாக்களுடனும் மேலதிக விசேடப் பயிற்சிகளுடனும் விரிவாக மீட்டல் செய்யப்படும்.

★ அனுமதிகளை முன் கூட்டியே நேர அட்டவணையுடன் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

[சி 9031]

யாழ். றோட்டறிக் கழகம் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம்

இலங்கை போதைப் பொருள் தடுப்புச் சங்கம் (SLANA) ஆரம்பிக்கவிருக்கும் போதைப் பொருள் சம்பந்தமான பயிற்சிநெறிக்கு ஐந்து (5) இளைஞர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பயிற்சி நெறி 15-09 94 முதல் 28 09 94 வரை கொழும்பில் நடைபெறும். தங்குமிடம், உணவு, பயிற்சிநெறி போன்றவற்றுக்கான செலவினத்தை மேற்படி சங்கம் பொறுப்பேற்கும். பிரயாணச்செலவினத்தில் ஒரு பகுதி யாழ். றோட்டறிச் சங்கத்தால் பயிற்சி நெறி முடிந்து திரும்பியதும் வழங்கப்படும்.

விண்ணப்பதாரிகள் ஆங்கிலத்தில் பேசவும் வசிக்கவும் ஆற்றல் பெற்ற பட்டதாரியாகவும், சமூக சேவை நிறுவனங்களில் ஈடுபாடுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும். மருத்துவபீட மாணவர்களும் தொழில்வாய்ப்புப் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

தகுதியுடைய விண்ணப்பங்கள் பின்வரும் முகவரிக்கு 08-09-94 நண்பகல் 12 மணிக்கு முன் வந்து சேரவேண்டும்.

Rtn ப. செல்வநாதன்
(தொழிற்சேவை இயக்குநர்)
7. உடையார் ஒழுங்கை
பழம் றோட், கந்தர்மடம்.

08-09-94 மாலை 5மணிக்கு தெரிவு நடைபெறும். தெரிவு செய்யப்பட்டவர்கள் 10-09-94இல் பிரயாணம் மேற்கொள்ளவேண்டும்.

செயலாளர்

யாழ். றோட்டறிக் கழகம்

06-07-94 (சி/9067)

உ

சிவமயம்

பூப்புனித நீராட்டு விழா

அன்புடையீர்!

நிகழும் சுபமங்களகரமான பவ வருடம் ஆவணித் திங்கள் 24ஆம் நாள் (1994-09-09) வெள்ளிக்கிழமை பகல் 2 03 மணிமுதல் 2-11 மணிவரை வரும் தனுலக்கினத்தினுள் உள்ள அமிர்த முகூர்த்த வேளையில்,

திரு. திருமதி அருட்சோதி தம்பதிகளின்
சிரேஷ்ட புத்திரி
திருவளர் செல்வி
கலைச்செல்வி
அவர்களுக்கு

எமது இல்லத்தில் நடைபெறவுள்ள மங்கள நீராட்டு விழாவில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து, செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்,
கு. அருட்சோதியும், பாரியாரும்
(உரிமையாளர்: செல்வி பான்சிபலஸ்)

கம்பர்மலை,
வல்வெட்டித்துறை. (32765)

கலை வர்த்தக கல்லூரி

C. C. A.

மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம்.

A/L 94

பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான பகல் நேர வகுப்புக்கள் (Day Class) ஆரம்பம்.

எமது வழமையான ஆசிரியர் குழு

ஆரம்பம்:- 10 - 09 - 1994

சனி காலை 8 மணி

குறிப்பு

(1) வாரத்தில் 4 மணித்தியாலம் வகுப்புக்கள் நடைபெறும்.

(2) மாணவர்கள் அனுமதிகளை முற்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

நிர்வகி

(சி / 9038)

NEW SCIENCE HALL

KANNATHIDDY ROAD, JAFFNA.

94 A/L

பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான பகல்நேர வகுப்பு

DAY CLASS

(பாடசாலை விலகிய மாணவர்களுக்குரியது)

ஆரம்பம்: 09 - 09 - 94

வெள்ளிக்கிழமை காலை 8.00 மணி

(சி/8978)

ROYAL INSTITUTE

(மானிப்பாய் மகளிர் கல்லூரி முன்பாக)

மானிப்பாய்.

SPOKEN ENGLISH

By

MR. BRITTO

புதிய பிரிவு

ஆரம்பம்: 10 - 09 - 1994

சனி 4 - 00 p m. (32758)

வல்வெட்டி வேவில்

வீரகத்தி விக்னேஸ்வரர் தேவஸ்தானம்

புதிய சித்திரதேருக்கான அச்சேற்றும் விழா

(09 — 09 — 1994)

காலம்:

பவவருடம் ஆவணி மாதம் 24ஆம் நாள் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 30 மணிக்கு விநாயக வழிபாடு. தொடர்ந்து

திரு. சுந்தரம் புவகலாலா அவர்களின் தலைமையில் (பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்- யாழ். கிளிநொச்சி மாவட்டம்)

காலை 9 மணிக்கு அச்சேற்றும் வைபவம் நடைபெறும்.

புதிய சித்திரத் தேர் நிர்மாணிப்பு,
சிற்பகலாரத்தினம்
ஆறுமுகம் ஜீவரட்ணம்
(பிரதம ஸ்தபதியார் ஆறுமுகம் சிற்பாலயம் திருநெல்வேலி)

விநாயக அடியார்கள் பெருந்திரளாக வந்து பெருமானை வழிபட்டு அச்சேற்றும் வைபவத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் வேண்டுகிறோம்

இங்ஙனம்:

— ஆதீனகர்த்தாவும் தேர்த்திருப்பணிச் சபையும்.

வேவில், வல்வெட்டி.

விளம்பர அன்பளிப்பு:

ஜெகா மோட்டோஸ்

([illegible])
வல்வெட்டி. [32745]

உ

சிவமயம்

அன்புடையீர் வணக்கம்,

யாழ்ப்பாணம் வண்ணை கலட்டி
அருள்மிகு கற்பக விநாயகர் ஆலய

புனராவர்த்தன பிரதிஷ்டா நவகுண்ட யாக மஹா கும்பாபிஷேகம்

09 - 09 - 91 வெள்ளிக்கிழமை அதிகாலை 6 05 மணி முதல் காலை 6-20 மணி வரை உள்ள சுபவேளையில் நடைபெற திருவருள் பாலித்துள்ளது.

பிரதிஷ்டா குரு வேதாகம சிரோமணி
சிவஸ்ரீ நா. யோகேஸ்வரக் குருக்கள்
அவர்கள் நடத்தி வைப்பார்கள்
(ஆலய பிரதம குரு)

எண்ணெய்க் காப்பு சாத்துதல்: 08 - 09 - 94 வியாழக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்தலாம்.

09 - 09 - 94 வெள்ளிக்கிழமை மஹா கும்பாபிஷேகத்திற்குப் பின்பு பகல் 10 மணிக்கு மகா அபிஷேகம் பூஜை நடைபெற்று மகேஸ்வர பூஜை (அன்னதானம்) இடம்பெறும்

அன்று பிற்பகல் 4 மணிக்கு விநாயகர் சதுர்த்தி உற்சவம் நடைபெறும். வசந்தமண்டப பூஜை நடைபெற்று ஸ்ரீ கற்பக விநாயகர் வெளிவீதி உலம் வருவார்

இரவு 7 மணிக்கு விசேட சொல்விருந்து இசைவிருந்து நிகழ்ச்சிகள் நடைபெறும்

அனைவரையும் அன்புக்கரம் நீட்டி அழைக்கின்றோம்.

நன்றி

கலட்டி கற்பக விநாயகர் ஆலய
பரிபாலன சபையினர்

யாழ் வண்ணை. (32772)

துணவி அரசடி பிள்ளையார் கோயில் அலங்கார உற்சவம்

மேற்படி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை (09 — 09 - 1994) வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி பத்துத் தினங்கள் தொடர்ந்து நடைபெற திருவருள் கூடியுள்ளதென்பதை விநாயகரடியார்களுக்கு அறியத் தருகின்றோம்.

நன்றி:

— கோயில் பரிபாலனசபை.

துணவி,
வட்டுக்கோட்டை.
08 - 09 - 1994 (32726)

அறிவித்தல்

நெடுங்குளம் ஸ்ரீ அம்பலவாண விநாயகர் ஆலய புனரமைப்பு நிதிக்காக 6-9-94இல் நல்லூர் சந்நிதி ஆலயத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டு பரிசில்களின் விபரம்:

1ஆம்	பரிசு	02636	5000/-
ஆறுதல்	"	03675	1000/-
"	"	01843	"
"	"	01979	"
"	"	09191	"
"	"	03771	"

உரியவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

நன்றி

(32767) -ஆலய நிர்வாகம்.

G. C. E. O/L ஆங்கிலம்

PRACTICE MAKES PERFECT

[June, July மாதத்திற்குரியது]

ஆக்கம்: S. தெய்வதவபாலன்

கிடைக்குமிடம்:-

- * BITSMANS INSTITUTES, MANIPAY.
- * பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம்.
- * ஸ்ரீலங்கா புத்தகசாலை யாழ்ப்பாணம்.

(சி-9040)

BITSMANS கல்வி நிறுவனம்

மானிப்பாய்.

SPOKEN ENGLISH

By

M. A. ஹரி B. A. Dip in-Eng

ஆரம்பம்: 10 - 09 - 94

சனி மாலை 4-30 மணி

- * N C. E. ENGLISH — 1995
- * TOEFL

By

தெய்வதவபாலன் Dip in-Eng

ஆரம்பம்: 12-09-94

திங்கள் 4-00 p. m.

(சி-9041)

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

வடக்குக்கு மின்சாரம்

வடபகுதி மீது முந்திய அரசு விதித்த பொருளாதாரத் தடையை தளர்த்தியது போல, புதிய அரசு, வடக்குக்கு மின்சார வசதியும் செய்யலாம் என நம்பப்படுகிறது. இது விடயத்தில் நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சர் தேனுக அனுருத்த ரத்வத்த மட்டுமன்றி பிரதமர் சந்திரிகாவும் வேகமாகச் செயற்படுவதாக அறியவந்துள்ளது.

வடபகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசு முடிவு செய்திருப்பதாக அமைச்சர் ரத்வத்த அறிவித்து இருக்கிறார். சுன்னாகத்தில் உள்ள அனல் மின்சக்தி நிலையத்தைப் புனரமைப்பதன் மூலம் யாழ்ப்பாணக்குடாநாட்டுக்கு மின்சார வசதி செய்யலாம் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

வடக்குக்கு மீண்டும் மின்சார வசதி செய்வதானால், அரசு அனேகமாக காங்கேசன்துறை சிமெந்து ஆலையில் உள்ள "ரேபயில்" மின்சக்தி நிலையத்தைத் திருத்தி — புனரமைத்து — அங்கிருந்து மின்விநியோகத்தை நடத்தும் என்று பரவலாகப் பேசப்பட்டது.

படையினரின் கட்டுப்பாட்டில் — ஆக்கிரமிப்பில் — உள்ள பிரதேசங்களில் ஒன்றாக காங்கேசன்துறை விளங்குவதால், அங்கிருந்து மின்சாரம் வழங்கும் சாத்தியத்துக்கு அரசு முதலிடம் கொடுத்துச் செயற்படும் என்று கருதப்பட்டது.

ஆனால் அரசு சுன்னாகத்தில் இருந்தே மின்சார விநியோகம் செய்ய முடிவு செய்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது. சுன்னாகம் மின்சார நிலையத்தின் மீது குண்டு வீச்சு நடத்தி அதனைச் சேதப்படுத்தியது அரசே — அதன் விமானப்படையினரே. ஆகையால் அரசாங்கமே அதனைத் திருத்தி, புனரமைத்து மின் விநியோகத்தை ஆரம்பிக்க முடிவு செய்திருப்பது பொருத்தமானதே.

இத்திருத்த வேலைகளைச் செய்வதற்கு ஒத்துழைப்புத் தருமாறு விடுதலைப் புலிகளுக்கு விரைவில் அரசு எழுதவுள்ள பதில் கடிதத்தில் கேட்க இருப்பதாகவும் அமைச்சர் அனுருத்த அறிவித்திருக்கிறார்.

இது விடயத்தில் — மின்சார விநியோகம் மீண்டும் கிடைப்பதற்கு விடுதலைப் புலிகள் ஒத்துழைப்புத் தருவார்கள் என்பதில் சந்தேகம் இருக்கமுடியாது.

மின்சாரம் இல்லாததால் வடபகுதியில் ஏற்பட்டிருக்கும் பாதிப்புகள் பலப்பல. மாணவர்களின் கல்வி வளர்ச்சி முதல் விவசாய உற்பத்தி வரை மக்களின் அன்றாட வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட பல துறைகளிலும் பாதிப்பு உண்டாகியுள்ளது. குறிப்பாக வடக்கின் கைத்தொழில்கள் பாதிக்கப்பட்டதால் பலர் வேலைவாய்ப்பு இழந்து நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

மீண்டும் மின்சார விநியோகம் ஆரம்பிக்கப்பட்டால் வடக்கின் உற்பத்தித் துறைகள் புத்துயிர் பெற்று வளர்ச்சி காணும் என்பதில் ஐயமில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு மக்களின் வாக்குகளைப் பெற்று அமோக வெற்றிபெற வேண்டும் என்ற முனைப்பே, தமிழர்கள் கடந்த நான்கு வருடங்களாக இழந்திருந்த பல வசதிகளைச் செய்து கொடுக்க புதிய அரசைத் தூண்டுகிறது என்பதனையும் நாம் மறந்து விடுவதற்கில்லை.

அற்ப சலுகைகள், வசதிகளை காட்டி, தமிழர்களின் உரிமைகளை வழங்காமலே "ஏய்க்காட்டலாம்" என்ற எண்ணம் முந்திய சிங்களத் தலைவர்களின் மனங்களில் ஆழப்பதிந்திருந்தது. அதனாலேயே உள்நாட்டிலேயே இருநாடுகளுக்கிடையே நடப்பது போன்ற போர் ஒன்று நடக்கிறது.

இதனை மனதிற்கொண்டு சிங்களத் தலைவர்களின் புதிய சந்ததியின் புதிய தலைவர் என்பதை சந்திரிகா நிரூபிக்க வேண்டும். இது மிகவும் நீண்டதூரம் பயணமாக இருக்கும் என்பதை அவரும் எவரும் மறந்துவிடக்கூடாது.

புலிகளுடனான சமாதான பேச்சு மாதக்கணக்கில் இழுபடமாட்டாது

சிப்பாய்களின் கேள்விகளுக்கு அனுருத்த பதில்

கொழும்பு, செப். 8

கடந்த காலங்களில் இடம்பெற்றது போன்று புதிதாக நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தை மாதக்கணக்கில் இழுபடுவதற்கு நாம் அனுமதிக்கமாட்டோம்.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் தேனுக அனுருத்த ரத்வத்த முன்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

கடந்த வாரம் பிரதி அமைச்சர் கிழக்கில் உள்ள படை முகாம்களுக்கும் விஜயம் செய்தார்.

அப்போது படையினரின் கேள்விகள், சந்தேகங்களுக்கு அவர் பதிலளித்தார்.

பிரதி அமைச்சர் சொன்னதாவது:

பேச்சுவார்த்தை, கலந்துரையாடல் மூலம் சமாதானத்தைக் காணும் நடவடிக்கை தோல்வியடையுமானால், அரசாங்கம் யுத்த மூலமே வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு முடிவு காணும்.

அரசியல்வாதிகள் என்ற முறையில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கே நாம் முதலிடம் கொடுப்போம்.

ஆகவே பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண எமக்கு கால அவகாசம் தாருங்கள். அது தோல்வியடையுமானால் யுத்தத்துக்கு முடிவு காணும் பொறுப்பை உங்களிடம் ஒப்படைப்போம். அதற்கு நீங்கள் தயாரா?

அப்போது சிப்பாய்கள் ஒரே குரலில் "ஆம்" என்று பதிலளித்தனர் என்று டெய்லி நியூஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அமைச்சர் தொடர்ந்து பேசியதாவது:-

சமாதானத்தை எதிர்பார்த்து படையினர் செயலற்றும் பற்றுமின்றியும் இருக்கக்கூடாது. வழமையான உடற்பயிற்சிகளை படையினர் செய்து வர வேண்டும்; எந்த நேரமும் உஷார் நிலையில் இருக்க வேண்டும்.

சமாதானப் பேச்சு தோற்றால் யுத்தம் நடத்தவும் படையினர் தயாராக இருக்க வேண்டும்.

இப்படி அமைச்சர் கூறினார்.

இக்கட்டத்தில் சிப்பாய் ஒருவர் அமைச்சரிடம்:

"கடந்த காலத்தில் சமாதானப் பேச்சு நடந்தபோது விடுதலைப் புலிகள் அதனைப் பயன்படுத்திக்கொண்டு அதனைப் பயன்படுத்தினர். இந்த முறையும் இப்படியான ரகசிய நோக்கத்துடன்தான் விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சு நடத்த முன்வருகின்றார்களா என்று நாம் எண்ண வேண்டியுள்ளது."

இதற்கு அமைச்சர் சொன்னதாவது:

"கடந்த காலத்தைப் போன்று, உத்தேச பேச்சுவார்த்தை மாதக்கணக்கில் நீண்டுபோக நாம் அனுமதிக்கமாட்டோம். முப்படைகளின் ஆயுதம், போர்த்தளபாட மற்றும் உபகரணங்களின் தேவைகள் குறித்து படைத்தளபதிகளுடன் அரசாங்கம் ஏற்கெனவே பேச்சுக்களை நடத்தியுள்ளது. பேச்சுவார்த்தைக் காலத்தில் இத்தேவைகள் பூர்த்திசெய்யப்படும்.

மேஜர் சன்ன வீரதுங்கா:

"அரசுகளுக்கு இடையில் நேரடியாக இடம்பெறும் ஆயுதக் கொள்வனவில் மோசடிகள் இடம்பெறுவதில்லை. முகவர்கள் ஊடாக இடம்பெறும் ஆயுதக்கொள்வனவுகளில் தான் 40 சதவீதம் வரை முகவர்களுக்கு கமிஷன் வழங்கப்படவேண்டிய நிலை ஏற்படுகிறது.

பிரதி அமைச்சர்;

"இது முக்கியமான பேச்சு. சில சமயம் அரசாங்கம் முகவர் ஊடாக ஆயுதக்கொள்வனவு நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இப்படியான சமயங்களில் மோசடிகள் இடம்பெறுகின்றன. இம்மோசடிகள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் தடுக்க முயற்சிக்கப்படும்.

(தி-எ)

பூநகரிப் பாதையை திறக்க அரசு தயார்

அனுருத்த தெரிவிப்பு

கொழும்பு, செப். 8

யாழ் குடாநாட்டுக்கு தடைநீக்கப்பட்ட பொருள்களை தடங்கல் இன்றி தாராளமாக எடுத்துச் செல்வதை உறுதிப்படுத்துவதற்காக பூநகரி அல்லது ஆனையிறவு பாதையை திறந்து விடுவதற்கு அரசு தயாராக இருக்கிறது.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்த முன்கண்டவாறு வவுனியாவில் வைத்து செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தை நடக்கும் காலத்தில் படையினரின் சலுகைகள் குறைக்கப்படமாட்டா

பாதுகாப்பு பிரதி அமைச்சர் உறுதி

கொழும்பு, செப். 8

சமாதானப் பேச்சுவார்த்தை நடக்கும் காலத்திலும் ஆயுதப்படையினர் மற்றும் பொலிஸாருக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் உரிமைகள், சலுகைகள் மற்றும் அலவன்ஸ்கள் குறைக்கப்படமாட்டா. இக்காலத்திலும் படையினருக்கு தினமும் வழங்கப்படும் 80 ரூபா அலவன்ஸ் தொடர்ந்தும் வழங்கப்படும்.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் தேனுக அனுருத்த ரத்வத்த முன்கண்டவாறு படையினருக்கு உறுதி அளித்தார்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள படை முகாம்களுக்கு கடந்த வாரம் விஜயம்செய்து படையினர் மத்தியில் பேசிய போது அவர் இந்த உறுதிமொழியை அளித்தார். (எ)

பரீட்சை திகதிகள் குறித்து அரச அதிபர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 8

கணக்குப் பதிவாளர் தரம் 'இ' உத்தியோகத்தர்களுக்கான வினைத் திறமை காண் பரீட்சை ஏற்கனவே அறிவித்தபடி எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை நிர்வாக சேவை அரச உத்தியோகத்தர்களுக்கான நிர்வாக சேவை வினைத் திறமைகாண் பரீட்சையும், இரண்டாம் மொழிப் பரீட்சையும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 28 ஆம் திகதி நடைபெறும் என்றும்—

இதற்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 23 ஆம் திகதி ஆகும் என்றும் கொழும்பிலிருந்து யாழ் அரச அதிபர் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணக் கல்லூரியின் மகாகவி பாரதி விழா

யாழ்ப்பாணம், செப். 8

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் மகாகவி பாரதி விழா நாளை 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், 10 ஆம் திகதி சனிக்கிழமையும் இரண்டு நாட்கள் நடைபெறும்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் நிறுவனத்தில் நடைபெறும் முதல் நாள் நிகழ்ச்சியில் காலை 8-30 மணி முதல் "பாரதி ஒரு பன்முகப் பார்வை" என்ற கருத்தரங்கும் மாலை 3 மணி முதல் "பாரதியின் வரியெடுத்துப் பாவிசைக்கும் பாவலர்கள்" என்ற கவியரங்கும் மாலை 5 மணி முதல் "குற்றக்கூண்டிலே பாரதியார்" என்ற தலைப்பிலான வழக்காடு மன்றமும் இடம்பெறும்.

10 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரி ஒட்லி மண்டபத்தில் நடைபெறும் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் பாரதியின் உயர்தனிப் படைப்பு பற்றிய பட்டிமண்டபம் இடம்பெறும். (ச)

புலிகளின் குரல் வானொலியில்

08 – 09 – 1994

வியாழன் இரவு

- ★ 8-01 — சொல்லுங்கள் பார்க்கலாம்
- ★ 8-10 — சித்தமருத்துவ குறிப்புகள்
- ★ 8-20 — உழைப்போம் உயர்வோம் "மண்ணை நம்பினால்" குறுநாடகம்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — ஏட்டிலிருந்து — தமிழ்ச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற நூலிலிருந்து "மலேசியாவின் தமிழ் சிறுகதை" எனும் கட்டுரையின் சில பகுதிகள்
- ★ 8-50 — மலரும் மொட்டுக்கள்

09 – 09 – 1994

வெள்ளி காலை

- ★ 7-03 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — மணிநாதம்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 8-40 — தாயகப் பாடல்கள்

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைதானோரை விடுவிக்குக!

நாடாளுமன்றத்தில் சித்தார்த்தன் கோரிக்கை

வடபகுதி மீதான பொருளாதாரத் தடையை நீக்கியது போன்று பூநகரிப் பாதையையும் திறந்து யாழ் குடாநாட்டு பொதுமக்களின் போக்குவரத்திற்கு அரசு அனுமதி அளிக்கவேண்டும்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவாதத்தின்போது உரையாற்றிய புளொட் அமைப்பின் தலைவர் திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கொழும்பில் பெரும் எண்ணிக்கையானோர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும்.

தமிழ் மக்கள் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடையை அரசு நீக்கியுள்ளதை நாம் வரவேற்கிறோம் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-4)

வேலை வாய்ப்புப் பிரிவுக்கு 363 பேரே விண்ணப்பம்!

யாழ்ப்பாணம், செப் 8

யாழ். பிரதேச செயலக வேலைவாய்ப்புத் தகவல் பிரிவுக்கு இதுவரை 363 பேர் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர். ஆனால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் விண்ணப்பதாரிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பு வழங்கக் கோரி விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் விரைவில் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படும் என யாழ். பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுவரை விண்ணப்பிக்காதோர் தமது விண்ணப்பங்களை இவ்வாரம் இறுதிக்குள் யாழ். பிரதேச செயலக வேலைவாய்ப்புத் தகவல் பிரிவிற்கு அனுப்புமாறு [illegible] மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-17)

பயிலுநர் ஆசிரியர் நியமன கடிதம்

யாழ்ப்பாணம், செப் 8

நல்லூர் கோட்ட பயிலுநர் உதவி ஆசிரியர்களுக்கு, மாகாண கல்வி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட நிரந்தரக் கடிதங்கள் நாளை (வெள்ளி) பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் கோட்டப் பணிமனையில் வழங்கப்படவுள்ளதாக கோட்ட பிரதி கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், செப். 8

கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை எழுதிய 'இந்து நாகரிகத்தில் கலை' எனும் ஆய்வு நூலை, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை தமிழ் மன்றம் இன்று வியாழக்கிழமை காலை வெளியிடவுள்ளது.

தமிழ் மன்றத் தலைவர் நா. சிவசிதம்பரத்தின் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் நூல் வெளியீட்டுரையை அறிஞர் ஆ. சபாரத்தினமும், மதிப்புரையை யாழ் பல்கலைக்கழகச் சிரேஷ்ட விரிவுரையாளர் மா. வேதநாதனும் நிகழ்த்தவுள்ளனர். ஆசிரியர் கலாசாலை அதிபர் திருமதி சி. இராமநாதன் முதற் பிரதியைப் பெறவுள்ளார். (இ)

மனைப்பொருள் கண்காட்சி

யாழ்ப்பாணம், செப் 8

மகளிர் முன்னேற்ற நிலையம் எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் 4 நாட்களுக்கு மனைப் பொருட் கண்காட்சி ஒன்றை நடாத்தவிருக்கிறது.

யாழ் பிரதான வீதியில் உள்ள மறைக்கல்வி நிலையத்தில் இக் கண்காட்சி இடம்பெறும். (எ-3)

சந்திரிகாவுடன் அரச அதிபர் சந்தித்து பேச்சு

கொழும்பு, செப். 8

யாழ். அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் கடந்த திங்கள் காலை பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவைச் சந்தித்துப் பேசினார்.

இச் சந்திப்பு சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் நீடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதி நிலைவரங்கள் பற்றி அப்போது அரச அதிபர் பிரதமருக்கு எடுத்துச் சொன்னார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-எ)

ஒளி வீச்சு வெளிவந்துள்ளது

யாழ்ப்பாணம், செப். 8

நிதர்சனம் நிறுவனத்தின் மாதாந்த வெளியீடான "ஒளிவீச்சு" வீடியோ சஞ்சிகையின் ஜூலை மாத பிரதி வெளிவந்துள்ளது.

தமிழீழப் பகுதிகளில் எழுச்சியுடன் நடைபெற்ற கரும்புலிகள் தின நிகழ்வுகள், தமிழீழ நிர்வாக சேவையின் அங்குரார்ப்பண வைபவம், லெப். கேணல் ராதா பற்றிய "நீங்காத நினைவுகள்" என்னும் விவரண சித்திரம், கலை நிகழ்ச்சிகள் மற்றும் பல அம்சங்கள் ஜூலை மாத ஒளிவீச்சில் இடம்பெற்றுள்ளன. (ஐ)

கே. எஸ் ராஜா மரணத்தில் மர்மம் நீடிக்கிறது!

கொழும்பு, செப். 8

பிரபல வானொலி அறிவிப்பாளர் கே. எஸ். ராஜாவின் மரணம் தொடர்பாக பகிரங்கத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேல் விசாரணையை கொழும்பு நகர திடீர் மரண விசாரணை அதிகாரி எட்வர்ட் அஹங்கம ஒத்தி வைத்தார்.

கந்தையா சிறிஸ்கந்தராஜா என்றழைக்கப்படும் கே. எஸ். ராஜா கடந்த சனிக்கிழமை இரவு கொழும்பு காலி முகத்திடலில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

சயனைட் அருந்தியதால் மரணம் சம்பவித்ததாக பிரேத பரிசோதனை செய்த சட்ட வைத்திய அதிகாரி அசோகா டயஸ் தனது வைத்திய அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

மரண விசாரணையின் போது கே. எஸ். ராஜாவின் மனைவியான பொரளை சேர்பன்ஸ்டன் வீதியைச் சேர்ந்த ஜூட் பாலதேவி பெஞ்சமின் (வயது 41) கூறியதாவது:-

இறந்த கே. எஸ். ராஜா எனது சட்ட பூர்வமான கணவர்.

நாங்கள் திருமணம் செய்து 23 வருடங்கள் ஆகின்றன.

எங்களுக்கு ஒரு மகன் இருக்கிறார். எம்மிடையே எந்த வித மனத்தாங்கலும் இல்லை. கே. எஸ் ராஜா கடந்த மூன்று மாதகாலமாக வீட்டுக்கு வரவில்லை.

இறுதியாக வீட்டுக்கு வந்த போது மதுபானம் அருந்திய நிலையில் காணப்பட்டார். வந்தவுடனேயே திரும்பிச் சென்று விட்டார். எங்களது மகன் கனடாவுக்குச் சென்று பத்து நாட்களே ஆகின்றன. இதனைக் கேள்வியுற்ற அவர் சந்தோஷம் அடைந்ததாக அறிந்தேன்.

இப்படிச் சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்டது.

சாட்சியங்களை பதிவு செய்துகொண்ட மரண விசாரணை அதிகாரி, பகிரங்கத் தீர்ப்பு வழங்கியதுடன் மேல் விசாரணையை எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

சரியான சாட்சியங்கள் இல்லாததால் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஊழியர்களும் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (இ)

சித்திரத்தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், செப் 8

கரவெட்டி கிழக்கு கிழவி தோட்டம் விக்ன விநாயகப் பெருமான் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு திரு. வைரமுத்து செல்வராசா தலைமையில் நடைபெறும்.

பண்டிதர் கை. நமசிவாயக் குருக்கள், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. சி. சிவலிங்கராசா, நெல்லியடி மத்திய மகா வித்தியாலய பிரதி அதிபர் திரு. இ. நடராசா ஆகியோர் விழாவில் ஆசியுரை வழங்குவார்கள்.

சித்திரத்தேரை நிர்மாணித்த திருநெல்வேலி விநாயகர் சிற்பாலய தலைமைச் சிற்பக் கலைஞருக்கு தேர்த் திருவிழா உபயகாரர் சார்பாக திரு. க. கனகசுந்தரம்பிள்ளை பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பார். (ச)

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்

யாழ்ப்பாணம், செப். 8

கோப்பாய் பிரதேசத்தில் பகுதிநேர 1995 ஆம் ஆண்டுக்கான ஆங்கில ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் மற்றும் தற்போது பகுதிநேர கடமையில் உள்ளோர் அனைவரும் கோப்பாய் கோட்ட கல்வி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

ஆலயங்களில்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் ஆவணி விநாயக சதுர்த்தி தினமும் இலட்சார்ச்சனை பூர்த்தி விழாவும் நாளை 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும்; அன்று காலை ஸ்ரீ பஞ்சமுக விநாயகருக்கு கணபதி ஹோமம் நடைபெற்று மாலை 5 மணிக்கு விசேடமாக அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் விநாயகர் வீதியுலா வருவார். (ச)

* * *

பண்டத்தரிப்பு பணிப்புலம் ஞானவைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை காலை 6-30 - 7-40 மணி வரையான நேரத்தில் நடைபெறும். (ச 23)

* * *

சாவகச்சேரி நுணாவிற்பதி கொல்லங்கிராய் ஸ்ரீ வீரசக்தி விநாயகர் ஆலய மகாகும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை காலை 6-40 முதல் 7-04 மணிவரை நடைபெறும். (ச-117)

* * *

பளை, இரட்டைக்கேணி கண்ணகை அம்பாள் கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று (வியாழன்) ஆரம்பமாகி தொடர்ந்து 11 நாட்கள் நடைபெறவுள்ளது. (ஐ-117)

விளையாட்டு நிகழ்வுகள்

அராலி "நிலா ஒளி" விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான ஒவர்சேப் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று (வியாழன்) நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விபரம் வருமாறு:-

★ பிற்பகல் 2 மணி — மானத்தை வி. க. 'ஏ' அணி எதிர் நிலா ஒளி வி. க. 'ஏ' அணி.

★ பிற்பகல் 3 மணி — சரஸ்வதி வி. க. 'ஏ' அணி எதிர் இளம்பறவை வி. க. அணி.

★ பிற்பகல் 4 மணி — சரஸ்வதி வி. க. 'பி' அணி எதிர் முரளி வி. க. 'பி' அணி.

★ பிற்பகல் 5 மணி — வட்டுக்கோட்டை வி. க அணி எதிர் அராலி [illegible] வி. க. (ஐ—20)

கஷ்டங்களை......

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இங்குள்ள மக்களின் கஷ்டங்கள் குறித்து சரியான தகவல்கள் தெரியாத நிலையில் பிரதமர் இருந்தார். மக்கள்படும் கஷ்டங்களை மிக அவதானத்துடன் கேட்டதோடு அக்கணமே சில நடவடிக்கைகளை உடன் எடுப்பதாகவும் உறுதி அளித்தார்.

புதிய பிரதமருடன் கலந்துரையாடிய பின்னர் அவரது தலைமைத்துவத்தின் கீழ் அமைதி பிறக்கும் என்ற நம்பிக்கை உண்டாகிறது.

நான் இந்நாட்டின் பல பிரதமர்களைச் சந்தித்துக் கலந்துரையாடி உள்ளேன். இவர் மிகுந்த புத்திக்கூர்மையுடன் செயற்படுகிறார்.

நாம் சொல்வதைக் கூர்ந்து அவதானித்துக் கேட்டு [illegible] மக்களின் கஷ்டங்களை போக்குவதற்கு உடனுக்குடன் நடவடிக்கையும் எடுக்கிறார்.

மாற்றங்கள் வரும்

யாழ்ப்பாண மக்கள் படும் கஷ்டங்களை நீக்குவதற்கு உடனடியாகச் சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்ற மனப்பாங்கு புதிய பிரதமரிடம் காணப்படுகிறது.

அவருக்கு நாம் ஒத்துழைப்புக் கொடுப்போமானால், இப்போதுள்ள நிலைமையில் சில மாற்றங்கள் வரும்.

பிரதமருடன் நான் பேசிய போது யாழ்ப்பாணத்துக்கு மீண்டும் மின்சாரம் வழங்கத் தீர்மானித்துள்ளதாக தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கு விரைவில் நிவாரணம் வழங்கப்படும் என்றும் பிரதமர் சந்திரிகா உறுதி அளித்தார்.

பயிர்ச் செய்கையை ஊக்குவிக்க அரசு உதவும் என்றும், ஆதலால் விவசாயிகள் ஆர்வத்துடன் விவசாயத்தில் ஈடுபடலாம் என்றும் —

தொலைத் தொடர்பு வசதியை வழங்க முயற்சி செய்வதாகவும் பிரதமர் என்னிடம் தெரிவித்தார்.

இவ்வாறு அரச அதிபர் கூறினார். (ஐ-3)

பிறந்த நாள் வாழ்த்து

செல்வன் அ. ராஜமோகன்
[பரியோவான் கல்லூரி 95 ஆம் ஆண்டு கணிதப்பிரிவு மாணவன்]

காரைநகர் அரியரெட்ணம் — [illegible] தம்பதிகளின் அன்புச் சிரேஷ்ட புதல்வன் ராஜமோகன் தனது பதினெட்டாவது பிறந்த தினத்தை 8-9-1994 (இன்று) தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். யோகனை அவரது அன்பு நண்பர்கள் பல்கலையும் கற்று, பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

நண்பர்கள்

(32775)

யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. பயிற்சி நெறிகள்

தட்டெழுத்து — ஆங்கிலத்திலும் தமிழிலும்
சுருக்கெழுத்து— ஆங்கிலத்திலும் தமிழிலும்

மேற்கண்ட பயிற்சி நெறிகள் 15—90—1994 இல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை கீழ்க்கண்ட விலாசத்திற்கு 10 — 09 — 1994 இற்கு முன்னர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

பொதுச்செயலாளர்.

வை. எம் சி. ஏ.,
யாழ்ப்பாணம்.

(சி-9074)

JAFFNA - Y.M.C.A
TALENT CONTEST- (MUSIC) -1994

WESTERN:

Age groups: Under 7, 10, 13, 16,19&Open
Events: Individual vocal & Instrumental
Group Vocal & Instrumental Open
Duet - Piano Open

கீழ்நாட்டு இசை (கர்நாடகம்)

வயதுப் பிரிவு: 7. 10, 13 16 19 வயதிற்கு கீழ் வயது கட்டுப்பாடற்ற பிரிவு
நிகழ்ச்சிகள்: வாய்ப்பாட்டு
இசைக்கருவி — வீணை; வயலின்; புல்லாங்குழல்
விண்ணப்ப முடிவு திகதி; 15 09-1994

விண்ணப்பங்களை நேரில் சமர்ப்பிக்கவும். ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் தயவு செய்து காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

மேலதிக விவரங்களுக்கு
நிகழ்ச்சிச் செயலாளர்
வை. எம், சி. ஏ,
யாழ்ப்பாணம்,

(C/9075)

இதய அஞ்சலி

செல்வன் பத்துமநாதன் பிரதீபன்

யா/மத்தியகல்லூரி இன்ரறக்ற் கழகத் தலைவர் [92/93] செல்வன் பத்மநாதன் பிரதீபன் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவரின் பிரிவால் துயருறும் பெற்றோர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்ரறக்ற் கழகம்,
யா/திருக்குடும்பக் கன்னியர்மடம்

(32771)

மரண அறிவித்தல்கள்

செல்வன் மாசிலாமணி குகன்
(NORWAY)

கொக்குவில் மேற்கு ஆனைக்கோட்டை வீதி மாசிலாமணி பரமேஸ்வரி தம்பதிகளின் அன்புமகன் குகன் 26-08-1994 அன்று Norwayஇல் அகால மரணமாகிவிட்டார். அவர் கிருபானந்தன், பிரேமானந்தி (Swiss), திருமாமணி (Swiss), சௌந்தரி (Norway), அகிலா (Norway) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கமலநாதன் (Swiss) டினேஸ் (Norway) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். இறுதிக்கிரியைகள் 06 09 94 இல் Norwayயில் நடைபெற்றன. உற்றார் உறவினர் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்,
க. தேவராசா
[சித்தப்பா]

People s Bank.
Regional Head office,
Jaffna.

(32763)

திருமதி யோகேஸ்வரன் வசந்தா

நேற்றைய அறிவித்தலின்படி அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (8 - 9 - 94) காலை 9 30 மணியளவில் சித்தன்கேணி, ''ஜெயமஹால்'' இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கை ஆறு மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்,
வ. கணபதிமுத்து
(தகப்பன்)

''ஜெயமஹால்'',
டச்சு றோட்,
சித்தன்கேணி.

(32773)

அரசின் முயற்சிகளைக் குழப்ப முயலும் நாசகார சக்திகள்

சாடுகிறார் அஸ்கிரிய பீடாதிபதி

கொழும்பு, செப் 8

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண சரியான பாதையில் செல்லும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் முயற்சிகளை அனுபவம் வாய்ந்த நாசகார சக்திகள் குழப்ப எத்தனித்து வருகின்றன.

அஸ்கிரிய பீடாதிபதி வண. பலிபான சந்தானந்த மகாநாயக்கதேரர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

தம்மை மரியாதை நிமித்தம் சந்தித்த துறைமுகங்கள், கப்பற் போக்குவரத்து மற்றும் புனர்வாழ்வுத்துறை அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப்பிடம் மகாநாயக்கர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இனப்பிரச்சினை விஷயத்தில் அரசு சரியான பாதையில் செல்வதை, வடபகுதி மீதான பொருளாதாரத் தடை தளர்த்தப்பட்ட நடவடிக்கை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது என்றும் மாநாயக்கதேரர் தெரிவித்தார்.

சட்டபூர்வமாகத் தெரிவு செய்யப்பட்ட பிரதமர் சந்திரிகா தலைமையிலான தலைமையிலான பொ. ஐ. மு. அரசாங்கத்தை பாதுகாக்கும் படி அமைச்சர் அஷ்ரப்பை தேரர் கேட்டுக்கொண்டார்.

சந்திரிகா தலைமையிலான அரசைக் கைவிட்டு வேறு ஒரு கட்சியுடன் தாம் சேரப்போவதில்லை என்று அமைச்சர் அஷ்ரப் தெரிவித்தார். (ஒ எ)

பிரபாவுக்கு...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் வாசித்த விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் செய்தியில் அடங்கியிருந்த அம்சங்களே பிரதமருக்கு அனுப்பப்பட்ட கடிதத்திலும் பெரும்பாலும் உள்ளடக்கப்பட்டிருப்பதாக அறியவருகிறது. (ஒ-ஐ)

யாழ் பல்கலை...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற பேராசிரியர் அ. துரைராசாவிற்கு விஞ்ஞான கலாநிதி என்னும் கௌரவப் பட்டம் தேகாந்த நிலையில் வழங்கப்படவுள்ளது. முதல் அமர்வில் இது வழங்கப்படும். தொடர்ந்து கலாநிதிப் பட்டம், கல்வியியல் பட்டப்பின் கல்வித் தகைமைச் சான்றிதழ், ஆங்கில மொழி கற்பித்தலில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ், மருத்துவ சத்திர சிகிச்சை மாணி, வர்த்தக மாணி, ஆகிய பட்டங்கள் முதல் அமர்வில் வழங்கப்படும்.

இரண்டாவது அமர்வில் முது விஞ்ஞானமாணி, விஞ்ஞான மாணி, தொழில் நிர்வாகமாணி, ஆகிய பட்டங்களும் —

முதுமெய்யியல்மாணி, முது இசைக்கலைமாணி, கலைமாணி, இசைக்கலை மணி, நாட்டியக் கலை மணி, சித்த மருத்துவ சத்திர சிகிச்சை மாணி ஆகிய பட்டங்கள் மூன்றாவது அமர்விலும் வழங்கப்படும்.

இத்துடன் ஒவ்வொரு அமர்வின் முடிவிலும் பரீட்சைகளில் திறமைகளை வெளிக்காட்டியவர்களுக்கு பரிசில்களும், புலமைப் பரிசில்களும் அளிக்கப்படும்- (ஐ-4)

மாணவர் உணவு முத்திரை

ஏழாலை, செப். 8

குப்பிளான் தெற்கு கிராம சேவையாளர் (ஜே-210) பிரிவுக்குட்பட்டவர்கள் தமக்குரிய மாணவர் உணவு முத்திரைகளை எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு கிராமசேவையாளர் தெரிவித்துள்ளார். (ஐ-35)

அரசு —.....
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை —

சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் தமது பிரதிநிதியின் பெயரை தெரிவிக்கும்படி விடுதலைப் புலிகள் இயக்கத்தை இலங்கை அரசு கேட்டிருப்பதாக செய்தி ஏஜென்சிகள் பலவும் நேற்று இரவு தெரிவித்தன.

இதற்கிடையில் —

திரு. லயனல் பெர்னாண்டோவை யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவது குறித்து நேற்று வரை தீர்மானம் எடுக்கப்படவில்லை என்றும் —

எனினும் அவர் அனுப்பப்படுவதற்கான வாய்ப்பு உண்டு என்று ஐ. க. வட்டாரங்கள் தெரிவித்ததாக மற்றொரு தகவல் தெரிவித்தது. [அ-எ-6]

வீரச்சாவு...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களப்பு) ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

அன்று ஆண்டான்குளம் பகுதியில் வன்னி எலுமிச்சைக்குளம் பகுதியில் நடந்த மோதலில் கப்டன் பாரதி (வீரசேகரம் விசுவலிங்கம் — மட்டக்களப்பு) வீரமரணமடைந்தார். (ஓ-3)

தபால்களை உடன் சேர்க்குக!

யாழ்ப்பாணம், செப். 8

இன்று வியாழக்கிழமை பருத்தித்துறையில் இருந்து புறப்படும் 'பிளம்பயாக்' கப்பலில் வெளிநாட்டு வான் கடிதம் உட்பட உள்நாட்டு சாதாரண கடிதங்கள் எடுத்துச் செல்லப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நாளை வெள்ளிக்கிழமை பருத்தித்துறையில் இருந்து புறப்படும் 'சோமாலி' கப்பலில் பதிவுத் தபால்களும், பார்சல் கடிதங்களும் எடுத்துச் செல்லப்படும்

இதற்கு ஏதுவாக வெளியூர் தபால்களை யாழ். பிரதம தபாலகத்தில் சேர்க்குமாறு யாழ். பிரதம தபாலதிபர் கேட்டுள்ளார். (ஒ-4)

பல்கலைக்கழக மாணவருக்காக நன்றித் திருப்பலி

யாழ்ப்பாணம், செப். 8

யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டமளித்து கௌரவிக்கப்படும் கத்தோலிக்க பட்டதாரி மாணவர்கள் அனைவருக்குமாக யாழ் நல்லாயன் நிலையத்தில் எதிர்வரும் ஞாயிறு காலை 7-30 மணிக்கு நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

''இருளில் ஒரு விளக்காய்'' என்னும் கருப்பொருளுடன் அந்த வழிபாடு இடம்பெறும்.

யாழ். மனித முன்னேற்ற நடுநிலையத்தின் இயக்குநர் அருட்திரு எஸ். எச். ஜெபநேசன் இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (ஐ)

---

4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 15 - 12 - 1915
மறைவு : 08 - 09 - 1990

''மரணமும் பாவமும் வென்றவனே
மனித குலம் காத்த மாதவனே
மரித்தவர் தஞ்சம் ஆகிடுவாய்
மாண்புயர் வானில் சேர்ந்திடுவாய்''

அமரர் அ. அ. பேதுருப்பிள்ளை

(வியாபாரியார்) அவர்கள் மயிலிட்டி

மண்ணில் மனம் மகிழ மக்கள் எமையணைத்து
கண்ணின் மணிபோல காத்து நின்றாய்
விண்ணின் பதியைநீர் விரைந்து சென்று
ஆண்டு நான்கானாலும் ஆறாது எம்துயரம்

நாடிழுனி லுற்ற நவமிலா நிலையால்
வீட்டை விட்டு நின்மக்கள் விலகியே
வாட்டமுடன் வாழுகின்றோம் வளமாக மீண்டும்
கூட்டமாய் சேர்ந்திடும்நாள் கூடாதோ ஐயா!

முறைமையுடன் காத்த மக்கள் மருமக்கள்
நிறைவான பேரர்கள் நித்தம் நினைக்கின்றோம்
இறையடியில் இணைந்திட்ட உங்கள் ஆன்மா
குறையின்றி என்றென்றும் வாழ்க! வாழ்க!!

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை,

குணம் கிறீம் கவுஸ் (குளிர்களி அகம்)
KUNAM [illegible]
49, [illegible]
சுன்னாகம்.

(சி-9078)

தையல், கைப்பணி பயிற்சி

ஏழாலை களபாவோடை வசந்தபுரம் நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தில் தையல், கைப்பணிப் பயிற்சி அம்மன் அருளோடு 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 11 மணி அளவில் தேசிய தொழில் பயிலுநர் அதிகார சபை வடக்கு கிழக்குப் பொறுப்பாளர் திரு. சிவயோகசுந்தரம் அவர்களால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படும்.

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை நா. போஜன், மாநகரசபை ஆணையாளர் திரு பாலசிங்கம் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார்கள். தேவஸ்தான தொண்டர்கள், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை அங்கத்தவர்கள் வேண்டிய ஒழுங்கைப் புரிவார்கள்.

வசந்தநாகபூஷணி
அம்மன் தேவஸ்தானம்

களபாவோடை,
ஏழாலை

(32774)

NEW SCIENCE HALL

KANNATHIDDY, JAFFNA.

மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பம்
க. பொ. த. உயர்தரம்

(94 A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கட்குரியது)

ஆரம்பம்: 09-09-1994

வெள்ளிக்கிழமை காலை 8 00 மணி

பௌதீகம் — திரு. கணேசன்
வெள்ளிக்கிழமை காலை 8 00 மணி
தூய/பிரயோக கணிதம் — திரு. வெக்டர்
வெள்ளிக்கிழமை காலை 10 00 மணி
இரசாயனம் — திரு. மணியம்
சனிக்கிழமை 8 00 மணி
பௌதீகம் — திரு. சோதிலிங்கம்
சனிக்கிழமை 9.00 மணி
இரசாயனம் — திரு. மணியம்
திங்கட்கிழமை 4.00 மணி
தூய/பிரயோக கணிதம் — திரு. குணசிங்கம்
செவ்வாய்க்கிழமை 4.00 மணி
விலங்கியல் — திரு. தம்பிராஜா
வியாழக்கிழமை 4.00 மணி
பௌதீகம் — திரு. சோதிலிங்கம்
வியாழக்கிழமை 4.00 மணி
தாவரவியல் — திரு. குணசீலன்
வெள்ளிக்கிழமை 4.00 மணி
பௌதீகம் — திரு. கணேசன்
வெள்ளிக்கிழமை 4.00 மணி

(சி/9077)

மரண அறிவித்தல்கள்

திருமதி
வல்லபாம்பாள் கிருஷ்ணமூர்த்தி ஐயர்

திருமதி வல்லபாம்பாள் கிருஷ்ணமூர்த்தி ஐயர் 7 - 9 - 94 புதன்கிழமை காலை காலமானார். இவர் திருமதி ரத்னாம்பாள் ரங்கசாமிசர்மா, திருமதி ஜானகி, திருமதி பட்டம்மாள் கல்யாணசுந்தரக்குருக்கள், சுப்பிரமணியஐயர், திருமதி ருக்மணி சர்வேஸ்வரசர்மா ஆகியோரின் அன்புத் தாயார் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் வியாழக்கிழமை 8 - 9 - 94 இன்று காலை 9 மணிக்கு கரவெட்டியில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கி. சுப்பிரமணிய ஐயர் (மகன்)
(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் யாழ் செயலகம்)

''குமார பவனம்''
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

(32778)

V. S. பாக்கியராஜா

அல்வாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் மூதூர் பள்ளிக்குடியிருப்பை வதிப்பிடமாகவும் மலேரியத் தடுப்பு காரியாலயம் (திருகோணமலையில்) கடமை புரிபவரும் நான்கு பிள்ளைகளுக்குத் தந்தையுமாகிய பாக்கியராஜா 25. 08. 94 இல் மூதூரில் அகால மரணமானார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:-
தாய், தகப்பன், சகோதரர்கள்
இராஜசுகுணா, (மெக்கானிக்), சாந்தரூபினி
(ஆசிரியை). தேவராஜா, இ. போ. ச.
(காரைநகர்) ஜீவராஜா, மெதடிஸ்த சேச்

செ. அ. ஞானச்சந்திரன்,
கிராம சேவையாளர்,
மந்திகை.

(32776)

OBITUARY

At Rest In Jesus

Walter Martin Thurairatnam Richards

Walter Martin Thurairatnam Richards - Beloved Husband Of Edna Jeyavathy Loving Father Of Dr. Jeba Richards (General Hospital, Jaffna), Sathianesan (Australia) And Dr. Clement (Newzealand), Father - in - low Of Vasanthi (Staff, Holy Family Convent Jaffna), Dr. Thayala (Australia), Sharmala (Newzealand), Grand Father Of Rebecca Niroshiny (Chundikuli Girls College), Niruban (St. Johns College), Uthayan And Tara (Australia) Expired Funeral Took Place On Wednesday 7 th September At His Residence In Colombo.

Informant
Dr. S. J. V. Richards
[Son]

17, Swartz Lane,
Chundikuli,
Jaffna.

[32777]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 392/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 08 - 09 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.